செய்தி வெளியீடு எண்:06 /2018 நாள்: 04.01.2018

**108 ஆம்புலன்ஸ்சில் பணிபுரிய மருத்துவ உதவியாளர் மற்றும் ஓட்டுநர் பணிக்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது!**

108 சேவை ஒரு கட்டணமில்லாத மருத்துவம், காவல் மற்றும் தீ முதலிய அவசர சேவைகளுக்கான ஒருங்கிணைந்த அழைப்பு எண்ணாகும். இந்த சேவை பொதுமக்களுக்கு 24 மணி நேரமும் கிடைக்கக்கூடிய முற்றிலும் இலவச சேவையாகும். தமிழக அரசு, தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ், GVK EMRI நிறுவனத்துடன், அவசரகால சேவைகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணைந்து தமிழக மக்களுக்காக செயலாற்றுகிறது. சென்னையில் உள்ள DMS Campus, Annasalai, Teynampet Chennai என்ற முகவரியை தலைமை இடமாகக் கொண்டு 108 அவசரகால சேவை மையம் இயங்கி வருகிறது. மேலும் தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்கிளலும் மொத்தம் 914 ஆம்புலன்சுகளுடன் இந்த 108 சேவை மக்களுக்கு தொடர்ந்து பயனளித்துக் கொண்டிருக்கிறது. GVK EMRI நிறுவனம் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் அவசரகால மருத்துவ உதவியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் **வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் அரங்கில் 06.01.2018 சனிக்கிழமை அன்று காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறவுள்ளது.** இந்நேர்முக தேர்வில் தேர்வு செய்யப்படுபவர்கள் தமிழகத்தின் எந்த பகுதியிலும் நியமனம் செய்யப்படுவார்கள். மேலும் 12 மணி நெர ஷிப்ட் முறையில் இரவு மற்றும் பகல் ஷிப்ட் என மாறும். தேர்வு செய்யப்படுபவர்களுக்கு பணி நியமன ஆணைகள் அதே நாளிலேயே வழங்கப்படும். வெளியூர்களில் இருந்து வரும் விண்ணப்பதாரர்கள் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை அவரவர்களே செய்துக் கொள்ள வேண்டும். இதற்காக தனியாக படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

ஓட்டுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி அல்லது தவறிய ஆண்கள் மட்டும், நேர்முக தேர்வு அன்று 23 வயதுக்கு மேலும் 35 வயது மிகாமலும், 162.5 செ.மீ. உயரத்திற்கு குறையாமலும், இலகரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge வாகன உரிமம் பெற்றவர்களாகவும், இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் எடுத்து குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் நிறைவு பெற்றவர்களாக இருக்க வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்களுடைய கல்வி, ஓட்டுநர் உரிமம் மற்றும் அனுபவம் தொடர்பான அனைத்து அசல் சான்றிதழ்களையும் சரிபார்பதற்காக கொண்டு வர வேண்டும். எழுத்துத் தேர்வு, தொழில்நுட்பத் தேர்வு, மனிதவள துறை நேர்காணம், கண்பார்வை சம்பந்தப்பட்ட தேர்வு, சாலை விதிமுறைக்கான தேர்வு ஆகிய தேர்வுகள் நடத்தப்படும். தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு 9 நாட்களுக்கு முழுமையான வகுப்பறை பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் தங்கும் வசதி வழங்கப்படும்.

மருத்துவ உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் EMT பரிவினருக்கு பி.எஸ்ஸி., நர்சிங், அல்லது GNM, ANM, DPharm, DMLT (12 ஆம் வகுப்பிற்கு பிறகு 2 ஆண்டுகள் படித்திருக்க வேண்டும்) அல்லது Life Science Graduates (B.Sc. Zoology, Botany, Plant Biology), 20 வயது முதல் 30 வயது வரை உள்ளவராக இருத்தல் வேண்டும். EMT –Trainee பிரிவிற்கு One year technician course from only Govt Medical College (12 ஆம் வகுப்பிற்கு பிறகு ஒரு ஆண்டு படித்திருக்க வேண்டும். EMT Technician, Ortho Technician, Respiratory Technician, ECG Technician, OT Technician ஆக இருக்க வேண்டும். 19 வயது முதல் 30 வயது வரை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இம்முகாமினை இளைஞர்கள் பயன்படுத்திக்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.